**பலாங்கொடை நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாங்கொடை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடனுக்காக ரூபா 61,653,691 தொகையான செலுத்த வேண்டிய வட்டி ரூபா 54,128,411 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூபா 7,525,280 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி பங்களிப்பாக ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 49,699 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நன்கொடையாகக் கிடைத்த ரூபா 156,743 தொகையான நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் அகற்றப்பட்ட ரூபா 18,966 தொகையான நூலகப் புத்தகங்கள் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 108 வருமானக் கடன்பட்டோர்களிடமிருந்து 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடவேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,202,654 ஆகும்.

(ii) முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 9,303,601 தொகையான நிதி மாற்றல் கணக்குகளின் மீதி 2018 ஏப்ரல் வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 139,100 தொகையான கடை வாடகை 2018 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பலாங்கொடை பேரூந்து நிலையத்துடன் சந்தைத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டிருந்த கடனுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என கூட்டுமொத்தமாக ரூபா 145,338,240 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 440,897,871 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

### 1.3.4 இணங்காமைகள்

### 1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசன் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | - | நகர சபைக்குரிய 05 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான மாதாந்த வாடகை அறவிடும் போது சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 1,500 வீதம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1) | 7,760 | 04 செம்பு பூச்சாடிகளின் பற்றாக்குறை தொடர்பான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 113 | 33,696,533 | நானாவித முற்பணக் கணக்கில் பல வருட காலமாக கொண்டு வரப்படுகின்ற தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 156(1) | 19,732 | மின்சாரப் பட்டியல் மற்றும் நீர்க் கட்டணப் பட்டியல்கள் குறித்த திகதியில் செலுத்தப்படாமையின் காரணமாக மிகைக் கட்டணம் செலுத்தப்படாத போதிலும் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமணம் 571 | 24,000 | 2015 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற உரித்து கோரப்படாத காலாவதியான வைப்புக்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டு வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | |
| (i) | 5.4.4.(i), 5.4.8(அ), 5.4.13(அ) வழிகாட்டிகள் | 1,728,419 | பெங்கியாவத்த கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்கான முற்பணத்தைச் செலுத்தும் போது ரூபா 1,168,841 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 559,578 தொகையான செயலாற்றல் பிணை பெறப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் போது கலைக்கப்பட்ட நட்டக் கணிப்பீட்டிற்குரிய நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 9.3.1(ஆ) வழிகாட்டி | 316,745 | ரூபா 200,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், உழவு இயந்திரமொன்றின் என்ஜினை முழுமையாக பழுதுபார்த்தல் தொடர்பாக அதன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான 36 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 ஆந் திகதிய | - | பலாங்கொடை பேருந்து நிலையத்தின் சந்தைத் தொகுதிக் கட்டிடத்தில் 143 |

| | |
|---|---|
| 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.5 ஆம் பந்தி | கடைகளுக்காக 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டுத் திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மதிப்பீட்டிற்காக வாடகைக்குப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தமையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,227,735 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,888,420 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 8,276,000 | 8,372,029 | 8,887,800 | 3,015,177 | 9,359,000 | 8,197,414 | 9,278,165 | 3,530,947 |
| வாடகை | 28,633,000 | 23,387,731 | 23,031,819 | 942,067 | 20,281,000 | 20,176,773 | 20,267,514 | 586,155 |
| அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 4,042,000 | 3,165,883 | 3,165,883 | - | 2,100,000 | 2,843,980 | 2,843,980 | - |
| ஏனைய வருமானம் | 25,175,000 | 17,644,659 | 17,509,073 | 1,549,963 | 38,409,000 | 2,850,552 | 28,279,067 | 1,414,377 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 60,668,726 ஆன சேகரிக்கப்பட்ட வருமானம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 52,594,575 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 8,074,151 இனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வீதவரி மற்றும் வரிகளில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 1,083,000 இனால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

முன்னைய ஆண்டில் நிலுவையாகக் காணப்பட்ட ஆதனவரிக் கட்டணம் ரூபா 2,293,325 இனை அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 மே முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரியதாக அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை இனங்கண்டு சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், பொதுமக்களின் சுகநலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு வருடாந்தம் 5,040 மெட்ரிக் தொன் கழிவுப்பொருட்களின் அளவொன்று சேகரிக்கப்படுவதுடன் அதில் உக்கும் கழிவுப் பொருட்களை சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற உக்காத 2,016 மெட்ரிக் தொன் கழிவுப்பொருட்கள் அளவில் சேகரிக்கப்படுவதுடன் அதில் 1,512 மெட்ரின் தொன் அளவில் மீள் சுழற்சி செய்யப்பட்டிருந்தது. மீள் சுழற்சி செய்யப்படாத கழிவுப் பொருட்கள் வருடமொன்றிற்கு 504 மெட்ரிக் தொன் வீதம் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் சேகரிக்கப்படுவதுடன் அவைகள் நாயகிய கழிவுப்பொருள் மலைக்கு அருகாமையில் திறந்த வெளியில் குவிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு பாதகமற்ற வகையில் அகற்றுவதற்கான திட்ட முறைமையொன்று 2018 ஏப்ரல் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபைக்கு அறிவித்திருந்த போதிலும் அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின்

வாழ்கையை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் செயலாளர் பதவி, 01 நூலகர் பதவி, 01 முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர்கள், 03 வருமானப் பரிசோதகர் பதவிகள், 01 மருந்து கலவையாளர் பதவி மற்றும் 04 வேலைத் தொழிலாளர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டமையினால் உரிய பணிகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதல் தொடர்பாக பிரச்சினைகளுடனான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2016 மார்ச் 15 ஆந் திகதிய Dms/D/0217 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கட்டிடத்தின் மூலம் பலாங்கொடை நகர சபையில் தீ அணைப்பு பிரிவிற்காக 20 பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தீயணைப்பு பிரிவை 2018 ஏப்ரல் வரையிலும் முறையாக ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 07 காணிகளுக்குரிய கூறிடல் திட்டத்தை அங்கீரிப்பதற்கு முன்னர், விற்பனை செய்வதற்குள்ள நிலக்கூறுகளின் உள்ளபடியான விற்பனைப் பெறுமதி தொடர்பாக மதிப்பீடொன்றைப் பெற்று அதன் அடிப்படையில் 01 சதவீத வரித்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், காணி விற்பனைக்கான வரிப் பதிவேட்டைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கடைகளை உப வாடகைக்கு வழங்குதல்**

பேருந்து நிலைய கடைகளை வாடகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர்களினால் அக்கடையை அல்லது அதன் ஏதாவதொரு பகுதியின் உரித்தை ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்தல், கையளித்தல் அல்லது உப குத்தகைக்கு வழங்குதல் முடியாதிருந்த போதும், ரூபா 10,100 கூட்டுத்தொகையான மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்ட 02 கடைகள் கூட்டுமொத்தமாக ரூபா 35,000 வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பொதுச் சந்தையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கைக்கு முரணாக 07 கடைகள் உபகுத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக 2018 ஏப்ரல் வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளை விரிவுபடுத்துதல்**

வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர்களினால் கடைகளை அல்லது பொதுச் சந்தையில் ஏதாவதொரு பகுதியை குறிப்பிடத்தக்க அளவில் அல்லது வேறு முறைகளில் மாற்றுவதற்கோ முடியாதிருந்த போதிலும், பொதுச் சந்தை நுழைவாயிலின் முன்பக்கம் 02 கடைகளில் புதிதாக பகுதியொன்று சேர்க்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பிரதான பேருந்து நிலையத்தில் 04 கடைகள் ஒன்றுக்கொன்று பிரயாணம் செய்யக்கூடிய வகையில் அவற்றின்

உள்ளேயுள்ள சுவர்கள் உடைத்து தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும் சபை அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) பலாங்கொடை பொதுச் சந்தையில் மீன் விற்பனை செய்தல்**

பொதுச் சந்தையில் பொது மலசல கூடத்திற்கு இரு பக்கமும் அதற்கு அடுத்தாலும் நிர்மாணிக்கப்பட்ட 03 கடைகளை களஞ்சியமாக பயன்படுத்துவதற்காக நகர சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கைக்கு முரணாக அந்தக் கடைகள் மீன் விற்பனை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(உ) சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 மே 21 ஆந் திகதி வெஸக் பௌர்னமி போயா தினத்தின் போது மதுபானம் 163,110 மில்லிலீற்றர் அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு முரணாக சபைக்குரிய பலாங்கொடை விருந்தினர் விடுதியில் வைக்கப்பட்டமையின் அடிப்படையில் இரத்தினபுரி உதவி மதுவரி ஆணையாளரினால் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ரூபா 1,515,000 தண்டப்பணம் சபைக்கு விதிக்கப்பட்டிருந்தது. அந்த தண்டப்பணத்தைச் செலுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் 09 தவணைகளில் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 1,515,000 தொகையான தண்டப்பணத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்காக மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் குற்றமாக "மதுவரி உத்தியோகத்தரால் மதுபானம் மிகை இருப்பை வைத்திருத்தல் தொடர்பாக சுற்றிவளைப்பை மேற்கொண்டு விருந்தினர் விடுதி முத்திரை வைத்து மூடப்பட்டுள்ளது" எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மதுவரி கட்டளைச் சட்டத்தின் 27 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்தல் / கைவிடல் அறிவித்தல் குறிப்பிடப்பட்டு அரசாங்கத்தின் நியதியின் பிரகாரம் அனுமதிப்பத்திர நிலையம் மூடப்பட வேண்டிய வெசக் மாத பௌணர்மி போயா தினத்தின் போது மதுபானம் விற்பனை செய்தமை, அனுமதிக்கப்படாத நிலையங்களிலிருந்து மதுபானங்களை எடுத்துச் செல்லும் வரை அனுமதிப்பத்திர நிலைய வளாகத்தில் களஞ்சியப்படுத்துதல், நாணயக் கடிதம் இன்றி மதுபானத்தை விருந்தினர் விடுதிக்கு வழங்குதல் மற்றும் 12 மதுபானங்களின் அனுமதிப்பத்திரத்தில் அங்கீகரிக்கப்படாத நிலையத்தில் மதுபானத்தை களஞ்சியப்படுத்துதல் போன்ற விடயங்கள் நகர சபையினால் தொடரப்பட்ட வழக்கின் குற்றங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர சபைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டார் கிரேடர் இயந்திரம் 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபையினால் 2013 செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 1,900,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கம்பன வீதிச் செப்பனிடுகை இயந்திரம் 2016 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.5 பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4 ஆவது அத்தியாயத்தின் 4.2.1(அ) வழிகாட்டியின் பிரகாரம், சபையினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மூலதனச் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 46.35 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 26.53 மில்லியனாக இருந்தமையால் நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 19.83 மில்லியன் அதாவது 43 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறைத்தும், அதிகரித்தும் கணக்கீடு செய்தல் |
| | | (iii) பேரேட்டுக் கணக்கு மீதிகள் பதிவேடுகளுடன் இணங்காமை |
| (ஆ) | வாகனக் கட்டுப்பாடு | (i) வாகனப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) வாகன எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | செலவின நிதிஏற்பாடுகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய சேமிப்புக் காணப்பட்டமை. |
| (ஈ) | வருமான நிர்வாகம் | (i) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| | | (ii) நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| (உ) | மனிதவள முகாமைத்துவம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |